


இன்று நம்முடைய பரவலான மஹல்லாக்கள் மற்றும் தனி நபர்கள் அனைவரும் தனித்தனியாக வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மஹல்லாவின் அவசியமும் பூர்த்தியாவதில்லை; மஹல்லாவாசிகளின் அவசியமும் பூர்த்தியாவதில்லை. மஹல்லாவின் அஸ்திவாரம் மஸ்ஜிதுகளாகும். ஒரு பள்ளியுடன் இணைந்திருக்கும் எல்லா வீடுகளுக்கும் ''ஒரு மஹல்லா'' என்கிறோம்.

## மஹல்லா நோக்கமென்ன?

நாம் இருக்கும் இடத்தில் ஒரு பள்ளிவாசல் இருக்க வேண்டும். பள்ளிவாசலின் கண்காணிப்பில் மஹல்லாவாசிகளின் தேவைகள் இலகுவாக பூர்த்தியாக வேண்டும். மஹல்லாவிலுள்ள பாதைகள் நன்றாக இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கு தோதுவான இருப்பிடம் இருக்க வேண்டும். எல்லோரிடமும் ஹலாலான சம்பாத்தியத்திற்கான வழிவகை இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு நல்ல முறையில் மார்க்கக் கல்வி மற்றும் உலகக் கல்விக்கான

மிகச்சிறந்த மதரஸாக்கள் மற்றும் பள்ளிக் கூடங்கள் இருக்க வேண்டும். நோயாளிகளின் சிகிச்சைக்காக மருத்துவமனை இருக்க வேண்டும். மஹல்லாவிலுள்ள மக்கள் தங்களுக்கு மத்தியில் அன்பு, விட்டுக் கொடுக்கும் உணர்வுள்ளவர்களாக மற்றும் மற்றவர்களின் நலவை நாடக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அவசியமான நேரங்களில் உதவி செய்ய முன்வருபவர்களாக இருக்க வேண்டும். சோதனைகளின் போது சோதனைகளை தூரமாக்குபவர்களாக மேலும் கவலையில் பங்கு கொள்ளும் நபர்களாக இருக்கவேண்டும். மகிழ்ச்சியின் போது ஒன்றாக மகிழ்ச்சியை வெளிப்படுத்துபவர்களாக. ஏழைகள், அனாதைகள் மற்றும் விதவைகளின் சரியான வாழ்வாதரத்திற்கு ஏற்பாடு செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இவைகளனைத்தும் மஹல்லாவின் அடிப்படை மற்றும் அவசியங்கள் ஆகும். எங்கெல்லாம் இந்த நிலைபாடுகள் இல்லையோ அவைகளை மஹல்லா என்று சொல்ல முடியாது.

## மஹல்லாவிற்கு வடிவம் கொடுத்தல்

மஹல்லாவை உருவாக்க செய்யவேண்டியவை: முதலாவதாக மஹல்லாவை சர்வே எடுக்கவேண்டும். அதில் மஹல்லாவின் அனைத்து வீடுகளிலும் உள்ள ஆண், பெண், குழந்தைகளின் மொத்த எண்ணிக்கைகளைக் கொண்ட ஒரு பட்டியலை தயாரிப்பது. கல்வியறிவு பெற்ற, கல்வியறிவு பெறாத மக்களின் ஒரு பட்டியலை தனித்தனியாக தயார் செய்ய வேண்டும். ஒவ்வொருவருடைய தனித் திறமைகளையும் கணித்து ஒரு விவரக்குறிப்பை ஏற்பாடு செய்யவேண்டும். மஹல்லாவிலுள்ள அனைத்து அவசியத் தேவைகளின் தகவல்களையும் ஒன்று திரட்டுவது. மேலும் அவைகளில் முக்கியமானவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வேலைகளை ஆரம்பிப்பது. உதாரணமாக: சுத்தமான குடிநீருக்கான ஏற்பாடு, தரமான சாலைகளை அமைப்பது, கல்விக்கான கட்டமைப்பை உருவாக்குவது.

## மஹல்லாவாசிகளுடன் ஆலோசனை

மனிதன் சமூகத்தில் வாழக்கூடிவயன். அவன் தனியாக வாழ

முடியாது. இதனால் சமூகத்துடன் சேர்ந்திருந்து ஒருவர் மற்றவருக்கு உதவி செய்து வாழ வேண்டிய அவசியம் உள்ளது. மஹல்லாவில் ஒன்றாக வசிக்கும்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு தீர்வு காண்பது ஒரு மனிதனால் முடியாது. மாறாக, அந்த பிரச்சினைக்கு சமூக அளவில் தீர்வு காண வேண்டியுள்ளது. அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண மஹல்லா கமிட்டிகள் முன்வர வேண்டும். அவர்கள் அந்த பிரச்சினையை ஒன்று சேர்ந்து தீர்வு காண்பார்கள்.

முழு மஹல்லாவை எல்லா வகையிலும் சர்வே எடுத்த பின்னால் மஹல்லா கமிட்டியை உருவாக்குவதற்காக முதலாவதாக மஹல்லாவுடைய தலைவர்களையும், மதிக்கத்தக்க மக்களுடன் ஒரு ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைத்து மஹல்லாவினுடைய பிரச்சினைகளைப் பற்றி பேச வேண்டும். மேலும் தீர்வு காண்பதற்காக ஆலோசனை கேட்க வேண்டும். அதன் பின் மஹல்லா அல்லது பள்ளிவாசல் கமிட்டிக்கு வடிவம் கொடுக்க வேண்டும். முன்னால் வைக்கப்பட்ட பிரச்சினைகளிலிருந்து முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை கையில் எடுத்து அதில் யோசனைகள் செய்து தீர்வை காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் வேலைகளை மறுபரிசீலனை செய்து கொண்டே இருக்க வேண்டும். மேலும் அதன் முடிவு வரை கொண்டு செல்ல வேண்டும்.

## வேலையின்மையை எவ்வாறு தூரமாக்குவது?

மஹல்லாவாசிகளை அவர்களுடைய திறமைக்கேற்ப அவர்களை வேலையில் அமர்த்த முயற்சி செய்ய வேண்டும். மஹல்லாவில் யாரும் வீணாக இருக்கக் கூடாது. உதாரணமாக: உயர்படிப்பு படித்தவர்களுக்கு ஏற்ற வேலை கிடைக்கவேண்டும். அவரை உயரதிகாரிகளிடம் அறிமுகப்படுத்தி பொறுத்தமான பாதையை தேடி எடுக்க முயற்சிக்க வேண்டும். மேலும் வேலையின்மையை ஒழிப்பதற்காக பல தரப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். இதன் மூலம் விரைவில் மஹல்லாவாசிகளுக்கு அவர்களுக்கு தோதுவான வேலை கிடைக்க வேண்டும். மேலும் மக்கள் சந்தோஷமான வாழ்க்கை வாழவேண்டும்.

## மஹல்லா பாதுகாப்பு

இஸ்லாத்தில் ஒரு மனிதனின் அழிவு முழு மனித சமுதாயத்தின் அழிவாகும். ஒரு மனிதனைப் பாதுகாப்பது முழு மனித சமுதாயத்தையும் பாதுகாப்பதாகும். இந்த செய்தி மஹல்லாவாசிகளை தன்னம்பிக்கையின் பக்கம் வரவழைப்பதாகும். மஹல்லாவிலுள்ள வயோதிகர்கள், குழந்தைகள், பெண்கள் குறிப்பாக ஒவ்வொருவரையும் பாதுகாக்கும் பொறுப்பு மஹல்லாவிலுள்ள வாலிபர்கள் மற்றும் செல்வாக்குள்ள மக்களின் கைகளில் உள்ளது என்ற உணர்வை மஹல்லாவாசிகளுக்கு ஊட்ட வேண்டும். அவசர நிலை மற்றும் இயற்கை ஆபத்துகள் வரும்பொழுது மஹல்லாவாசிகள் ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கு முன்னிலையில் இருக்கவேண்டும். இதற்காக மஹல்லாவாசிகளுக்குள் விட்டுக்கொடுத்தல் மற்றும் உதவும் மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். மேலும் அவர்களுக்கு ஒற்றுமையின் வலிமையை விளக்க வேண்டும்.

மஸ்லக், மத்ஹப்கள் என்று பிரிந்துவிடாமல் மனிதநேயத்தை கருத்தில் கொண்டு செயல்படும் சிந்தனையை உருவாக்கவேண்டும். அன்பு, சகோதரத்துவத்தின் தலைப்புகளில் வட்டார மொழிகளில் அவ்வப்போது சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். மஹல்லாவிலுள்ள மக்கள் ஏதேனும் ஒரு மத்ஹபை பின்பற்றுபவர்களாக இருந்தாலும் சரி, பின்பற்றாவிட்டாலும் சரி உடல் உறுப்புகளை போல அவர்கள் அனைவரும் ஒரே கோத்திரம் ஆவார்கள். இதன் மூலம் ஒன்றுபட்டு சந்தோஷமாக வாழமுடியும். மேலும் அதிகமதிகம் முன்னேறிக்கொண்டே வாழ்க்கை பயணம் மேற்கொள்வார்கள்.

ஒருவர் மற்றவரைப் பார்த்து பொறாமைப்படுவதற்கு பதில் அதிகம் ஊக்கப்படுத்த வேண்டும். மேலும் முன்னேற்றப் பாதையிலுள்ள தடைகளை தகர்ப்பதில் உதவி செய்ய வேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியமானது முழு மஹல்லாவாசிகளும் ஒரு கோத்திரம் போல் வாழவேண்டும்.

## மஹல்லா கட்டமைப்பு

மஹல்லாவை உருவாக்க மஹல்லா உருவாக்குபவர் தேவைப்படுகிறார். அதற்காக கீழ்க்கானும் காரணிகள் மற்றும் வழிகள் பெறப்பட வேண்டும். அந்த வழிகளை பெறுவதற்காக திட்டமிடலுடன் ஏற்பாடு செய்து தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டே வரவேண்டும்.

### 1)கல்வி விழிப்புணர்வு

ஏப்ரல் மாதத்திற்கு கொஞ்சம் முன்னால் இருந்தே கல்வியின் சிறப்பு மற்றும் அதன் அவசியம் பற்றிய தலைப்புகளில் தாக்கம் ஏற்படுத்தும் விதமாக பேசிக் கொண்டிருக்க வேண்டும். ''கல்வியில்தான் மனிதனின் முன்னேற்றம் அடங்கியுள்ளது. கல்வியின்றி முன்னேற்றம் சாத்தியமில்லை'' என்ற தலைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும்.

மஹல்லாவாசிகளிடமிருந்து ஏழ்மை, அறியாமை, கல்வியின்மை, பயம் போன்றவைகளை போக்குவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். கல்விக் கட்டுரைகள் அடங்கிய சிறிய புத்தகங்களை அச்சிட்டு பரப்பிட வேண்டும். கல்விசார் அமர்வுகளை ஏற்படுத்துவது. ஜும்ஆ உரைகள் மற்றும் இதர சந்தர்ப்பங்களின் போது ''நல்ல, சிறந்த மற்றும் உயர்ந்த கல்வியை பெற வேண்டும்'' போன்ற தலைப்புகளில் சமுதாயத்தை தட்டி எழுப்பும் உரைகளை செய்ய வேண்டும்.

### 2) தன்னார்வலர்கள்

முழு சமூகத்திற்கும் தங்களுடைய உடல், உயிரைப் போல நேசம் கொள்பவர்கள். அனைவரையும் தன்னுடைய குடும்பத்தைப் போல் நலம் நாடுபவர்கள். யாருக்கும் கெட்டது நினைக்காதவர்கள். அவர்களது இரவு பகல் உழைப்பின் நோக்கம் சமூகத்தை எப்படி முன்னேற வேண்டும்? எப்படி பாதுகாப்பானதாக ஆக்க வேண்டும்? எப்படி எல்லா தளங்களிலும் முன்னேற்றமடைய வேண்டும்? என்பதைப் பற்றியே இருக்கும். மஹல்லாவில் இப்படிப்பட்ட நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

ஹிந்து, முஸ்லிம், கிருஸ்துவர்கள் அனைவரும் தங்களது

மதங்களை பின்பற்றிக் கொண்டிருக்க வேண்டும். எல்லா மக்களும் ஆர்வத்துடனும், மன ஒற்றுமையுடனும் தங்களது மதங்களின் படி நடக்க வேண்டும். ஆனால், ஒருவரு மற்றொருவருடைய மதத்தை இழிவுபடுத்தக் கூடாது. இப்படிப்பட்ட மனநிலையை மஹல்லாவில் உருவாக்கவேண்டும். யாராவது அறிவிலாதோர் தவறான நடவடிக்கையில் ஈடுபடுவதை கண்டால் அவருக்கு அன்புடன் விளக்கவேண்டும். இவ்வாறு எல்லா மனிதர்களும் ஓர் உடல், ஓர் உயிரைப் போல வாழ்க்கை வாழ்பவர்களாக ஆகிவிடவேண்டும்.

### 3) தன்னம்பிக்கையை வார்த்தெடுத்தல்

நாம் சுய வலிமைமிக்கவர்களாக ஆக வேண்டும். பிறருடைய உதவிக்காக எதிர்பார்த்து அமர்திருக்கக் கூடாது. பள்ளிவாசல்களில் உடற்பயிற்சிக்கான உபகரணங்களை ஏற்பாடு செய்யவேண்டும். மனம் கவர்ந்த சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். தங்களுடைய ஆரோக்கியத்திற்காக மஹல்லாவாசிகளே தானாக தயாராக வேண்டும். மேலும் நல்ல உணவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தீய உணவுகளிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். போதைப் பொருள்களை பயன்படுத்துவதை விட்டும் சமுதாயத்தை தூரமாக வைக்கவேண்டும்.

## தூய்மையான மஹல்லா

1)தங்களுடைய உள்ரங்கம், வெளிரங்கம் இரண்டையும் தூய்மையாக வைத்திருப்பது மஹல்லாவாசிகளின் பொறுப்பாகும்.

2)ஒவ்வொருவரும் தங்களுக்குள் அழகிய நற்குணத்தை உருவாக்கிக்கொள்வது அவசியமாகும்.

3)தங்களுடைய வீடு, இருப்பிடம், பள்ளிவாசல், மதரஸா, சாலைகள், தெருக்கள், சாக்கடைக் கால்வாய் போன்ற அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

## முடிவாக...

எப்பொழுது ஒரு மஹல்லா தனக்குள் அனைத்து விதமான குறைபாடுகளை விட்டும் தூய்மையாக ஆகுமோ நகரம் தானாகவே சக்திமிக்கதாக ஆகிவிடும். பிறகு வட்டம், மாவட்டம் மேலும் மாநிலம் பிறகு

முழு தேசமும் சக்திமிக்கதாக ஆகிவிடும். இவ்வாறு முழு தேசத்தினுடைய முன்னேற்றத்தின் பாதையும் எளிதாகிவிடும்.

## ஓர் செய்தி

இந்த தேசம் நம்முடையதாகும். இதன் முன்னேற்றத்திற்காக நாம் தான் முதலில் வர வேண்டும். மேலும் தேசத்தினுடைய அனைத்து குடிமகன்களையும் சேர்த்துக் கொண்டு முன்னால் முன்னேற வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் முன்னேற்றமடைந்துவிட்டால் தேசம் தானாக முன்னேற்றமடைந்ததாக மாறிவிடும்.

## சுருக்கமாக..

ஒரு முன்மாதிரி மஹல்லாவை உருவாக்க மஹல்லா வடிவமைப்பை வரைய வேண்டும். அதற்காக கணக்கெடுப்பு நடத்துவது, எல்லா மக்களையும் இணைப்பது மேலும் நம்முடைய மஹல்லாவை எப்படி உருவாக்குவது? எப்படி முன்னேற்றுவது என்று மத்தியில் ஆலோசனை செய்வது போன்றவைகளை செய்யவேண்டும்.

பிறகு மஹல்லா கட்டமைப்பு. மஹல்லாவை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்வதற்காக ஒவ்வொரு விஷயத்தையும் கையிலெடுத்து வேலையை ஆரம்பிக்க வேண்டும். உதாரணமாக, கல்வி இல்லையென்றால் அதற்குரிய ஏற்பாட்டை செய்வது. வேலை வாய்ப்பின்மை இருந்தால் வாழ்வாதாரத்திற்கான தேவைகளை செய்தல், வளங்கள் இல்லையென்றால் அவைகளை கண்டறிவது. மேலும் ஆலோசனை, ஒற்றுமை ஏற்படுத்துவதன் மூலம் சரியான கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

பிறகு பாதுகாப்பான மஹல்லாவை உருவாக்க வேண்டும். இதன் மூலம் அந்த ஊரின் அனைத்து மக்களும் கண்ணியத்துடன் வாழவேண்டும். யாரும் யாருக்கும் எந்த துன்பமும் தரக்கூடாது. அவர்களுக்கு எந்த வகையிலும் நஷ்டம் தரக்கூடாது. ஒரு மஹல்லாவில் இருக்கக்கூடிய அனைத்து நபர்களும், அனைத்து குடும்பங்களும் உள்ரங்கமான, வெளிரங்கமான அனைத்துவிதமான கவலைகளிலிருந்தும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் இருக்க

வேண்டும். அதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்வது. அதற்காக தயாரிப்புகளை செய்ய வேண்டும். மக்களை அதற்காக தயாராக்க வேண்டும். மாதாமாதம் அதற்காக விவாதம், எண்ணப்பரிமாற்றங்கள் செய்ய வேண்டும்.

குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான் ;

அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்தான். பிறகு உங்களை அதிலேயே வாழவைத்தான் இதன் நோக்கம் யாதெனில் மனிதர்கள் பூமியில் வாழ வேண்டும். நாசமாகி வீணாக போகக் கூடாது. அதற்கான ஒரே வழிதான் ஒவ்வொரு விஷயமும் முறைப்படி இருக்கவேண்டும், ஒவ்வொரு காரியமும் முறையாக இருக்க வேண்டும் மேலும் எல்லா மக்களும் பாதுகாப்பானவர்களாகவும், உதவி செய்யும் குணமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

அல்லாஹ் நமக்காக இந்த பாதைகளை இலேசானதாக, தடங்களில்லாதாக ஆக்கியருள்வானாக. (ஆமீன்)